# யார் இந்த மனிதன்?



# யார் இந்த மனிதர்?

***Yaar Intha Manithar?***

(Tamil)

Who is this man?

by Michael W.

© OM India

This edition 2007

Reprint 2015

All rights reserved.

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic, or mechanical including photocopying, recording, or any information storage and retrieval system, without permission in writing from the publisher.

Published by

Authentic Outreach & David C Cook

Logos Bhavan, Suchitra Junction, Secunderabad 500 067,

Telangana. www.authenticindia.in

Printed and bound in India by

Authentic Media, Secunderabad 500 067



# யார் இந்த மனிதர்?

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இஸ்ரவேல் நாட்டில் இருந்த ஒரு சிறு கிராமத்தில் பிறந்தது ஒரு ஆண் குழந்தை! குழந்தையின் தாய் மரியாள் ஆடுகளுக்கும் பசுக்களுக்கும் இடையே ஒரு புல்லணையின் மீது குழந்தையை கிடத்தினாள். அவள் ஏழையாய் இருந்தபடியால் வேறு எந்த இடமும் அவளுக்குக் கிடைக்கவில்லை.

குழந்தை சாதாரணமானவனாயிருக்கவில்லை. அவன் பெற்றோர் ஏழை கிராமத்து மக்கள்; அவன் பிறப்பிடம் சாதாரணமானதும், சிறப்பில்லாததுமாக இருந்தது. இருப்பினும் எல்லோருக்கும் நற்செய்தி கொண்டுவரும் இறைவனின் தூதுவனாக இவ்வுலகில் அவதரித்தது அக்குழந்தை!

துயரப்படும் மக்களுக்கு உதவி செய்து, அவர்களை இரட்சிக்க விண்ணுலகிலிருந்து அவரை அனுப்பி வைத்தார், இறைவன்.

அக்குழந்தை பிறந்தபோது அதிசயங்கள் பல நடந்தன. அவர் இருந்த கொட்டகைக்கு மேலே வானத்தில் ஒரு பெரிய நட்சத்திரம் தோன்றியது. கிழக்கிலிருந்து மூன்று வேதசாஸ்திரிகள் அவரைத் தரிசிக்க வந்தனர். மலை மீதிருந்த ஆட்டிடையர்களும் அவரைக் காண இறங்கி வந்தனர். இறைவன் அவர்களிடம், "இதுவரை யாரும் அறியாத மகிழ்ச்சிகரமான நற்செய்தியை உங்களுக்காக நான் கொண்டு வந்திருக்கிறேன். இச்செய்தி எல்லோருக்கும் தான்! இன்று இரவு பெத்லகேமிலே உங்களுக்காக இரட்சகர் பிறந்திருக்கிறார். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையுண்டாவதாக!" என்றார்.

முப்பது வருடங்கள் கடந்தன. அந்தக் குழந்தை வளர்ந்து அமைதியாக தன் தகப்பனுடனே தச்சு வேலை செய்தான். அவர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்த போதும் பலர் அவரை அறிந்திருந்தனர். அநேகர் அவர் மீது அன்பு கொண்டிருந்தனர்.



அவருக்கு முப்பது வயது நடக்கும்போது, அவர் பிறப்பின் உண்மை இலட்சியம் வெளிப்பட ஆரம்பித்தது. அவர் தன் இல்லத்தையும், கிராமத்தையும் துறந்து ஒரு துறவியைப்போல, அம்மலைப்பகுதியில் ஊர் ஊராக அலைந்து இறைவனைப்பற்றி அறிவித்துக் கொண்டும் நற்காரியங்கள் பல செய்து கொண்டும் திரிந்தார்.

''இதோ, காலம் சமீபித்து விட்டது. இறைவனின் இராஜ்யம் நெருங்கி விட்டது. உங்கள் பாவங்களை விட்டு விலகி இந்த மகிமையின் செய்தியை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றுத் தன்னிடம் வந்தவர்களிடமெல்லாம் கூறினார். அவர் யார் என்று தெரிந்து கொள்ளவும், அவர் சொல்வதைக் கேட்கவும் பல இடங்களிலிருந்தும் மக்கள் வந்து கொண்டேயிருந்தனர். அவர் சொன்ன செய்திகள் இதுவரை யாரும் சொல்லியிராத புதுமையான கருத்துக்கள் கொண்டதாயிருந்தன.

இறைவன் தன் நண்பன் என்பது போல அவர் பேசி வந்தார். அவர் இறைவனைப் 'பிதா' என்று அழைத்தார். தன்னை இறைவன் நேசிப்பது போல அவர்களெல்லாரையும் நேசிப்பதாகக் கூறினார். பலர் இறைவனைப் பற்றி யோசித்து எண்ணி பயந்திருந்த வேளையில், இவர் இறைவனின் அன்பைப் பற்றி பேசினார்!

இஸ்ரவேல் நாட்டின் வடக்கு மலைத் தொடர்களில் மக்கள் மீன் பிடிக்கச் செல்லும் ஏரி ஒன்று இருந்தது. அதில் மீனவரின் படகுகள் ஏராளம் இருந்தன.

ஒரு நாள் அவர் அந்த ஏரிக்கரையிலே நடந்து கொண்டிருந்தபோது இருவர் படகிலே மீன்பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

சீமோன், அந்திரேயா என்று அழைக்கப்பட்ட மீன வர்கள் அவர்கள். அவர் களை, "வாருங்கள், என் னைப் பின்பற்றுங்கள்" என் றுக் கூறி அழைத்தார். சகோ தரர்களான அவ்விருவரும் உடனே தங்கள் வேலையை விட்டுவிட்டு அவரைப் பின் பற்றினார்கள்.



இப்படி அநேகர் நேசித்து பின்பற்றிய அந்த மனிதர் யார்? அவர் பெயர் இயேசு! அவருடைய உலக வாழ்க்கை ஆச்சரியமானதும், அற்புதமானதுமாய் இருந்தது.

# I

## இயேசு செய்த அற்புதமான காரியங்கள்

இயேசு அவர் சீடர்களுடன் வாழ்ந்து வந்தார். ஒன்றாக உண்டு, கிடைத்த இடத்தில் ஒன்றாக உறங்கி ஒருமித்து வாழ்ந்தனர். நாளெல்லாம் தூசு படிந்த பாதைகளில் நடந்து, கிராமங்களிலும், மலைச்சரிவுகளிலும் தன்னைச் சந்திக்க வந்த மக்களுடன் பேசினார் இயேசு.

இயேசு வாழ்ந்த பரிசுத்த வாழ்க்கை, மற்றவர்களுடைய வாழ்க்கையிலிருந்து மாறுபட்டிருந்தது. இறைவன் எப்போதும் அவருக்குத் துணைநின்று யாராலும் செய்யக் கூடாத அற்புதங்களைச் செய்ய அருள் புரிந்தார். ''என் பிதா (இறைவன்) இடைவிடாமல் நன்மையே செய்து கொண்டிருக்கிறார். நான் அவரைப் பின்பற்றி நடக்கிறேன்'' என்றார் இயேசு.

ஒரு நாள் சீமோன் மற்றும் அந்திரேயா என்ற சீடர்களின் சொந்த ஊருக்குச் சென்றிருந்தார் இயேசு. சீமோனின்

மாமியார் நோய்வாய் பட்டிருந்தாள். இயேசு அவளருகே சென்று அவள் கையைப் பிடித்த உடனே, நோய் அவளை விட்டு நீங்கிற்று. அவள் எழுந்து நின்றாள்.

இயேசு சுகமளிக்கும் வரம் பெற்றவர் என்ற செய்தி சீக்கிரமாய் பரவியது. மாலை நேரத்திற்குள் ஏராளமான மக்கள் அக்கிராமத்தில் கூடினர். இயேசு தங்கியிருந்த வீடு சுகம் பெற விரும்பும் நோயாளிகளாலும், பிசாசு பிடித்தவர்க ளாலும் நிறைந்தது. சிலர் வேடிக்கை பார்ப்பதற்கென்றே வந்திருந்தனர். இயேசு எல்லோருக்கும் சுகமளித்தார்.

ஒருமுறை ஒரு குஷ்டரோகி அவர்முன் மண்டியிட்டு "நீங்கள் மனது வைத்தால் என்னை சுகப்படுத்த உங்களால் கூடும்" என்று வேண்டிக் கொண்டான். இயேசு அவனுக் காக மனதுருகி, அவனைத்தொட்டு, "நீ சுகமடைய வேண் டும் என்று நான் விரும்புகிறேன்; நீ சுகமடைவாயாக" என்று கூறினார். உடனே குஷ்டரோகம் நீங்கி அந்த மனிதன் சுத்தமானான். அந்த நற்செய்தியை சத்தமிட்டு அறிவித்துக் கொண்டே சென்றான் அவன்.



நூற்றுக்கணக்கில் பார்வையற்றோர். ஊனமுற்றோர், நோயுற்றோர் மற்றும் தொழுநோய் கொண்டோர் சுகம் பெற வேண்டும் என்ற ஆசையுடன் இயேசுவைத் தேடி வந்தனர். அவர்களெல்லோரையும் சுகப்படுத்தவும், அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்கவும் உடையவராயிருந்தார் இயேசு.

ஒரு முறை இயேசு ஒரு வீட்டில் கூடியிருந்தவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசுவதைக் கேட்க ஏராள மான மக்கள் கூடியிருந்ததால், மேலும் மக்கள் உள்ளே வரக் கூடாமலிருந்தது.

நடக்கக்கூட முடியாத அளவிற்கு நோயினால் பீடிக்கப் பட்டிருந்த ஒருவரை நான்கு நண்பர்கள் சுமந்துக்கொண்டு வந்தனர். அவர்கள் இயேசுவைப்பார்க்க விரும்பினார்கள். தங்கள் நண்பனை அவர் சுகப்படுத்துவார் என்று விசுவாசித் தார்கள். ஆனால் இப்போது என்ன செய்வார்கள்?

அந்த வீட்டின் மேல் ஏறி, கூரையைப் பிரித்து அதன் வழியாக வீட்டினுள் வந்தனர். இயேசு அவர்களின் திடமான விசுவாசத்தைக் கண்டு, "நண்பா, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது," என்று அந்த நோயாளியிடம் சொன் னார்.

அங்கே இருந்த சில ஆலயத் தலைவர்களுக்கு அவரு டைய வார்த்தைகள் பிடிக்கவில்லை. "என்ன சொல்கிறார் அவர்? தன்னைக் கடவுள் என்று நினைத்துக் கொள்கி றாரோ? கடவுள் ஒருவர் தானே பாவங்களை மன்னிக்க முடியும்?" என்றார்கள்.

இயேசு அவர்கள் பக்கம் திரும்பி, ''இந்தக் காரியம் ஏன் உங்களைப் பாதிக்கிறது ? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வது எளிதா அல்லது அவனை சுகப்படுத்துவது எளிதா ?'' என்றுக் கேட்டார். தான் சுகமளிப்பதற்கு மட்டுமின்றி, ஒருவன் செய்த பாவங்களை மன்னிப்பதற்கும் வல்லமை உடையவர் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினார் இயேசு. பிறகு அந்த நோயாளியை நோக்கி, ''நீ சுகமடைந்தாய்'' என்றுக் கூறினார். உடனே அவன் எழுந்து தன் நண்பர்களுடன் நடந்து சென்றான்!

இயேசு மேலும் பல ஆச்சரியமான காரியங்கள் செய்தார். அவர் பார்வையற்றோரின் கண்களைத் தொட்டவுடன் அவர்கள் பார்வையடைந்தார்கள். உடல் ஊனமுற்றோர் சுகம் பெற்றார்கள். முப்பத்தியெட்டு வருடங்களாக நோய்வாய்பட்டிருந்த ஒரு மனிதனை அவர் சந்தித்தார். ''நீ சுகமடைய வேண்டும் என்று விரும்புகிறாயா ?'' என்றுக் கேட்டார். ''உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, எழுந்து நட !'' என்று கட்டளையிட்டார். உடனே அந்த மனிதன் சுகம் பெற்றான். தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தான் !

இத்தகைய அற்புதமான காரியங்களைச் செய்த இயேசு என்ற இம்மனிதர் யார் ?

## II

# எல்லோருக்கும் நண்பர்

தன் வாழ்நாள் முழுவதும் ஒரு பாவமும் செய்ய வில்லை இயேசு. ஒரு பொய் சொன்னதில்லை, திருடிய தில்லை, யாரையும் வெறுத்ததில்லை. அவர் வாழ்க்கை பரிசுத்தமும், தூய்மையும் நிறைந்ததாக இருந்தது.

நம்மை விட எத்தனை வித்தியாசமானவர் அவர்! நாம் நம் அயலாரை வெறுக்கிறோம். இயேசுவோ எல்லார் பேரி லும் அன்பு வைத்திருந்தார். நாம் பொய் சொல்லியிருக்கி றோம், ஏமாற்றியிருக்கிறோம். ஆனால் இயேசுவோ எப்பொ ழுதும் உண்மையே பேசினார். நாம் சுயநலம் கொண்டவர்க ளாகவும், பொறாமை கொண்டவர்களாகவும் இருக்கிறோம். ஆனால் இயேசுவோ கருணை நிறைந்தவராகவும், பிறர்க்கு உதவுவதில் சிறந்தவராகவும் இருந்தார்.

நம் உள்ளங்கள் தீயதாயும், தூய்மையற்றதாயும் இருக்கி றது, ஆனால் இயேசு எப்போதும் தூய்மையானவராய் வாழ்ந் தார்.

இயேசு இறைவனின் மைந்தனாக இருந்தபடியால், அவர் நல்லவராகவும், குறைவற்றவராகவும் இருந்தார்.

தான் எந்தவித தவறும் செய்யாதவராக இருந்தபோதி லும், எதிரிகளை நேசிக்கத் தவறவில்லை.

பாவிகளின் சிநேகிதர் என்று அழைக்கப்பட்ட அவர் கொடியவர்களின் உள்ளத்தை மாற்றினார். அவருக்கு நண்பர்களாக இருந்தவர்களில் சிலர் திருடர்களாகவும் பொய்யர்களாகவும் இருந்தனர்.

அவர்கள் தங்கள் பாவவாழ்வை விட்டு மனந்திரும்பி இயேசுவிடம் வந்தபோது அவர் அவர்களை மன்னித்து, புது வாழ்வு வாழ அவர்களுக்கு உதவி செய்தார். நெறிதவறிய வாழ்க்கை வாழ்ந்த ஒரு பெண் அவரிடம் கொண்டுவரப்பட்டாள். தான் செய்த பாவங்களுக்குத் தண்டனையாக அவள் மரிக்க வேண்டும் என பலர் கூறினார்கள். இயேசுவோ அங்கிருந்த ஒவ்வொருவரின் உள்ளமும் அப்பெண்ணின் உள்ளத்தைப் போலவே பாவத்தில் நிறைந்திருந்தது என்று அறிந்திருந்தபடியால் அவளை மன்னித்து "இனி பாவம் செய்யாதே போய்வா" என்று அவளை அனுப்பி வைத்தார்.

"நான் நல்லவர்களையல்ல, பாவிகளையே மனந்திரும்ப அழைக்க வந்தேன்" என்றார் இயேசு. நீர் பாவியென்றும் உன் உள்ளம் தீயது என்றும் நீ அறிந்திருந்தால், இன்றே இயேசுவிடம் வா; அவர் உன்னை மன்னித்து உன் உள்ளத்தைச் சுத்தமாக்குவார்.



இயேசு சிறு பிள்ளைகளை அதிகமாய் நேசித்தார். ''சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வரட்டும். இறைவனுடைய இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது'' என்றார்.

அவர் சிறுபிள்ளைகளை தன் கரங்களால் அணைத்து, தன் கைகளை அவர்கள் சிரசின் மீது வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

இயேசு எல்லோரையும் நேசித்தார். அவர் இறைவனையும் நேசித்தார், தன் சிநேகிதரையும் நேசித்தார். ஏழைகள், நோயுற்றோர் ஆகியவர்கள் மீது அன்பு வைத்தார். செல்வந்தனையும் சிநேகித்தார், பிச்சைக்காரனையும் சிநேகித்தார். தன் மீது பொறாமை கொண்டு, தன்னை வெறுத்தவர்களையும் நேசித்தார். இன்று உன்னையும் நேசிக்கிறார். நீ அவரை நேசிக்கிறாயா ?

நாம் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என்று போதனை செய்தவர் இயேசு. அவர், ''நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன். நான் உங்களை நேசிக்கிறது போல, நீங்களும் பிறரை நேசியுங்கள்'' என்றார்.

ஒருமுறை இப்படிக்கூட சொன்னார், ''உங்கள் விரோதி களை சிநேகியுங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.''

இயேசுவை எண்ணி பயப்படாதேயுங்கள். நீங்கள் மிகவும் கொடியவராக இருக்கலாம். இயேசு நீங்கள் செய்யும் தீய காரியங்களை வெறுக்கிறார்; ஆனால் உங்களை நேசிக்கிறார். நீங்களும் அவரை நேசிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

# III

# இயேசு சொன்ன கதைகள்

இயேசு நிறைய கதைகள் சொன்னார். அவர் சொன்ன ஒவ்வொரு கதையிலும் ஒரு ஆழமான சத்தியம் இருந்தது. இறைவனிடத்தில் சேருவதெப்படி என்று மக்கள் அறிந்து கொள்வதற்காகத்தான் கதைகள் சொன்னார்.



இயேசு நூறு ஆடுகள் வைத்திருந்த ஒரு ஆட்டிடையனைப் பற்றி ஒரு கதை சொன்னார். ஒரு நாள் ஒரு ஆடு வழி விலகி காணாமல் போனது. ஆட்டிடையன் எல்லா ஆடுகளையும் நேசித்தபடியால்,

மற்ற ஆடுகளை விட்டுவிட்டு காணாமல் போன ஆடு கிடைக்கும் வரை அதைத் தேடி அலைந்தான். அந்த ஆடு கிடைத்தவுடன் மனநிறைவுடன் வீடு திரும்பினான்.

ஒரே ஒரு பாவி மனந்திருந்தினாலும் இறைவன் இதே போல் மகிழ்ச்சியடைகிறார் என்று விளக்கமளித்தார் இயேசு. நாம் காணாமல் போன ஆட்டிற்கும் அவர் நல்ல ஆட்டிடைய னுக்கும் ஒப்பாக, எடுத்துக் கொள்ளலாம்.

அவர் சொன்ன மற்றொரு கதை, தன் பங்கு சொத்தை எடுத்துக் கொண்டு தன் தகப்பனிடமிருந்து பிரிந்து சென்ற ஒரு இளைஞனைப்பற்றியது. அந்த இளைஞன் தன் பங்கு சொத்தை எடுத்துக் கொண்டு தூர தேசத்திற்குப் போய்விட் டான்.

அங்கே அந்த இளைஞன் மது, சூதாட்டம், நெறிதவ றிய பெண்களுடன் சிநேகம் என்பது போன்ற எல்லா தீய பழக்கங்களிலும் தன் செல்வத்தை செலவழித்தான். சிலகா லத்திற்குப் பிறகு அவன் செல்வம் முழுவதும் கரைந்து போனது. கொடிய பஞ்சமும் வறட்சியும் ஏற்பட்டது. அந்த இளைஞனுக்கு உணவு கிடைக்காமல் போனது. பசியால் வாடினான். பன்றிகளுக்கு உணவளிக்கும் வேலை அவனுக் குக் கிடைத்த போது பன்றிகளின் உணவை அவனே உண்டான். மிகுந்த மனவேதனையடைந்தான்.

இறுதியில் தன் தகப்பன் வீட்டு வேலையாட்கள் கூட இவனைவிட மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று உணர்ந்து, ''நான் என் தகப்பன் வீட்டிற்குத் திரும்பிப் போய் அவரிடம், தகப்பனே உமக்கும், இறைவனுக்கும் விரோதமாக பாவம் செய்தேன். உம்முடைய குமாரன் என்று அழைக்கப்படும் தகுதியை இழந்தேன். ஒரு வேலைக்காரனாக என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுக் கேட்பேன்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

தன் மகன் வருவதைக்கண்ட தகப்பனோ, அகமகிழ்ந்து ஓடோடிச் சென்று அவனை முத்தஞ்செய்து வரவேற்றார். தன் மகன் செய்த பாவங்களுக்காக அவனை தண்டிக்க வில்லை. அவனை மன்னித்து தன் வீட்டிற்குள் சேர்த்துக் கொண்டார்.

நீங்களும் அந்தக் கதையில் வரும் இளைஞனைப் போல பல பாவங்கள் செய்தவராய் இருக்கலாம். நீங்கள் இறைவனிடத்தில் திரும்பினால் நிச்சயம் மன்னிக்கப்படுவீர் கள் என்று இயேசு சொல்கிறார்.

இறைவன் ஒரு பாசம் நிறைந்த தந்தையைப் போன்ற வர். நீங்களும் உங்கள் பாவ வாழ்க்கையை விட்டு விலகி

அவரிடத்தில் திரும்ப வேண்டும் என அவர் விரும்புகிறார். அவர் உங்களை மகிழ்ச்சியால் நிரப்புவார்.

# IV

## மரணத்தைப் போல உறுதியான அன்பு

இயேசு பாவம் செய்யவில்லை. நன்மை செய்து கொண்டு ஊர் ஊராக அலைந்தார். எல்லோரையும் நேசித்தார். இப்படியிருந்தபோதும் அவரை பலர் வெறுத்தனர்.

சில போதகர்களும், ஆலையத் தலைவர்களும் அவர் மீது பொறாமை கொண்டு அவரை வெறுத்தார்கள். அவர்களைப் பின்பற்றிச் சென்றவர்களைவிட, இயேசுவைப் பின்பற்றிச் சென்றவர்கள் அதிகமாயிருந்தது தான் இதற்குக் காரணம்; மேலும் தங்களால் செய்ய முடிந்ததை விட இயேசுவால் செய்ய முடிந்த காரியங்கள் அநேகமாயிருந்தது. இதுமட்டுமல்லாமல் அந்தப் போதகர்களும் மத தலைவர்களும் மற்றவர்கள் போலவே பாவிகளாய் இருக்கிறார்கள் என்று இயேசு சொல்லி வந்தார். இது உண்மையென்றபோதிலும் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

இதனால் அவர்கள் இயேசுவை வெறுத்து அவரைக் கொன்றுவிட திட்டமிட்டனர்.

இயேசுவின் இந்தத் துறவு வாழ்க்கை மூன்று வருடங்கள் நீடித்தது. இறுதியில் அவர் எருசலேம் பட்டணத்திற்கு வந்தார். அநேகர் அவரைக் காண்பதிலும், அவர் பேசுவதைக் கேட்பதிலும் ஆர்வம் காட்டிய போதிலும் சிலர் அவரைக் கொல்லத் திட்டமிட்டனர்.

ஒரு வியாழக்கிழமை மாலை தன் பன்னிரண்டு சீடர்களுடன் சேர்ந்து உணவருந்தினார். அவர்கள் மேல் தான் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தும் வகையில் தண்ணீரால் அவர்களுடைய கால்களைக் கழுவினார். தேவனும் அதிபதியுமானவர் தன்னைத் தானே தாழ்த்தி எல்லோருக்கும் பணியாளானார். பிறகு சில காரியங்களை அவர்களுக்குச் சொன்னார். தான் இறைவனுடன் ஒன்றாயிருப்பதால் பரலோகம் சென்று விடப் போவதாகக் கூறினார். ''நான் எங்கே செல்கிறேன் என்றும், அங்கே வருவது எப்படி என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்'' என்றார் இயேசு.

அவருடைய சீடர்களுள் ஒருவனான தோமா அவரை நோக்கி, ''நீர் எங்கே போகிறீர் என்று எங்களுக்குத் தெரியாது. அங்கு செல்ல வழி எப்படித் தெரிந்திருக்கும்?'' என்றுக் கேட்டான். இயேசு அதற்கு மறுமொழியாக, ''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். ஆம்

என்னாலேயல்லாமல் ஒருவனாலும் பிதாவினிடத்தில் வரக்கூடாது'' என்றார். இதன் மூலம் இறைவனை அறிந்து கொள்வதற்கு ஒரே வழி இயேசு தான் என்பதைத் தெரிவித்தார்.

இயேசு, ''என்னை நேசித்தால், எனக்குக் கீழ்படியுங்கள். அப்பொழுது நான் இறைவனிடம் விண்ணப்பித்து உங்களுக்கு உதவ இன்னொருவரை அனுப்புவேன். அவர் உங்களை விட்டு விலகவே மாட்டார். அவரே பரிசுத்த ஆவி'' என்றார். இதன் மூலம் இயேசு தெரிவித்தது என்னவென்றால் தான் பிரிந்துச் சென்றாலும் வேறு உருவில் தன்னை நேசிப்பவர்களுடன் இருப்பார் என்பது தான். உடலளவில் காணமுடிந்தபடி அவர்களுடன் இல்லாவிட்டாலும் காண முடியாத ஆவியாக அவர்களோடிருப்பார். ''சில நாட்களில் இவ்வுலகைவிட்டுப் பிரிந்துச் சென்றாலும் உங்களுடனேயே இருப்பேன்'' என்றார்.

''நான் உங்களுக்காக 'உள்ளத்திலும், எண்ணத்திலும் சமாதானம்' என்ற ஈவை விட்டுச் செல்கிறேன். ஆகவே பயப்படாதீர்கள். திகையாதீர்கள். நான் சொன்னதை நினைவு கூருங்கள். நான் பிரிந்துச் சென்றாலும் உங்களிடத்தில் திரும்பி வருவேன்'' என்றார்.

பிறகு இயேசுவும், அவர் சீடர்களும் அந்த வீட்டை விட்டு பட்டணத்திற்கு வெளியே சென்றனர். இயேசு தன்னைப் பலர் வெறுப்பதை அறிந்திருந்த படியால் தன் சீடர்களும் பலரால் வெறுக்கப்படுவார்கள் என்றுக் கூறினார். "நீங்கள் என்னைச் சேர்ந்தவர்களாய் இருப்பதால் உங்கள் மீதும் குற்றஞ்சுமத்துவார்கள். ஏனென்றால் நான் தேவனிடத்திலிருந்து வந்தவன் என்று அவர்கள் அறிய மாட்டார்கள் ஒரு முறை தங்கள் விரோதிகளை சிநேகிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார் அல்லவா ?.

"என் பிதா (இறைவன்) என்னை நேசிப்பதைப் போல நானும் உங்களை நேசிக்கிறேன்.. எனக்குக் கீழ்ப்படிந்தால், நீங்கள் என் அன்பில் ஜீவிப்பவர்களாயிருப்பீர்கள்.... நான் உங்களை நேசிப்பதுபோல, நீங்களும் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என்று உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்! மகா உன்னதமான அன்பு, தன் சிநேகிதனுக்காக ஒருவன் தன் உயிரைக் கொடுக்கும்போது வெளிப்படுகிறது. நீங்கள் எனக்குக் கீழ்படியும்போது என் சிநேகிதராயிருக்கிறீர்கள்" என்றார் இயேசு.

மரங்கள் நிறைந்த பகுதிக்கு அவர்கள் வந்தபோது, தன் பிதாவினிடத்தில் விண்ணப்பம் செய்யும் படியாக இயேசு பிரிந்து சென்றார். அவருடைய சீடர்கள் அதிக களைப்பாக இருந்தபடியால், உறங்கிப் போனார்கள்.



திடீரென அவர்கள் விழித்துக் கொண்டார்கள். பட்டணத்திலிருந்து காவலர்கள் சிலர் வந்திருந்தனர். அது இருள் சூழ்ந்த வேளையாயிருந்தபடியால் அவர்கள் விளக்குகளோடு வந்திருந்தனர்.

அவர்கள் நேராக இயேசுவின் அருகில் வந்தனர். இயேசுவின் சீடர்களுள் ஒருவனே அவரைக் காட்டிக் கொடுக்கும்படியாக காவலர்களை அழைத்து வந்திருந்தான். இயேசுவை வெறுத்த அவருடைய விரோதிகள் அவரோடு வந்திருந்தனர்.

இயேசு தப்பியோட முயற்சிக்கவில்லை. அவர் நிரபராதியாயிருந்தார். அவருக்குப் பயமில்லை. இறைவன் அவரோடு இருந்தார். காவலர்கள் அவரைப்பிடித்து கைது செய்து பட்டணத்திற்குள் அழைத்துச் சென்றார்கள். சீடர்கள் அனைவரும் ஓடிப்போய் விட்டார்கள்.

இயேசுவின் விரோதிகள் அவரைக்கொலை செய்ய விரும்பினார்கள். ஆனால் அவர் குற்றம் ஏதும் செய்யவில்லை என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர் பாவம் அறியாத நிரபராதி என்பதும் அவர்கள் அறிந்த விஷயம் தான்.

ஆகவே அவரைப் பற்றிக் கட்டுக் கதைகளை உரு வாக்கி பொய் சாட்சிகளை நியமித்து அவர் மீது குற்றஞ்சுமத் தினார்கள்.

இயேசு அவர்களுக்குப் பதில் கூற முயற்சிக்கவில்லை. அமைதியாக நின்று தன் விரோதிகள் தன்னைப்பற்றிக் கூறிய பொய் சாட்சிகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். தன் மீது பொறாமை கொண்டதினால் தன்னைக் கொலை செய்ய விரும்புகிறார்கள் என்று இயேசு அறிந்திருந்தார். எல்லோரும் இயேசு நிரபராதி என்று புரிந்து கொண்டார்கள்.

நீதிபதியும் (அவன் பெயர் பிலாத்து) இயேசு குற்றம் செய்யாதவர் என்று அறிந்திருந்தான். அவர் உண்மையா கவே ஒரு இராஜாவா? என்று பிலாத்து அவரிடத்தில் கேட்டான். "நான் உலகத்தைச் சேர்ந்த இராஜா அல்ல. என் இராஜ்யம் உலகத்தைச் சேர்ந்ததல்ல", என்று பதிலளித்தார் இயேசு. "அப்படியானால் நீ உன்னை ஒரு ராஜாவாக எண்ணிக்கொண்டிருக்கிறாயா? என்று மறுபடியும் கேட் டான் பிலாத்து. "ஆம் நான் அதற்காகவே பிறந்தேன். சத்தியத்தை உலகிற்கு உணர்த்தவே நான் வந்தேன். சத்தி யத்தை நேசிக்கும் யாவரும் என் சீடர்கள்" என்றார். பிலாத்து மக்களிடம் திரும்பி "இவர் எந்தக் குற்றத்தையும் செய்யவில் லை" என்றான்.

ஆனால் இயேசுவை வெறுத்த மக்களோ ''அவரைக் கொலை செய்யுங்கள், அவரைக் கொலை செய்யுங்கள்'' என்று சத்தமிட்டனர். பிலாத்து மக்களுக்கு பயந்தபடியால் இயேசு கொலை செய்யப்படும் படி, மக்களிடத்தில் அவரை ஒப்புக்கொடுத்தான்.

இயேசுவை அழைத்துச் சென்ற காவலர்கள் அவரை அடித்தார்கள்; அவர் தன்னைத் தானே 'இராஜா' என்று சொல்லிக் கொண்டதால் அவரைக் கேலி செய்தார்கள்; முட்களால் செய்யப்பட்ட கிரீடத்தை அவருக்குச் சூட்டினார்கள்; அவரை அடித்து அவர் மீது துப்பினார்கள்.

கொலை செய்யப்படுவதற்காக, பட்டணத்திற்கு வெளியே ஒரு மலைமீது அவரைக் கொண்டுச் சென்றார்கள். அதை வேடிக்கைப் பார்க்க ஒரு கூட்டம் கூடியது.

இயேசு ஒரு தவறும் செய்ய வில்லை. தன் வாழ்நாள் முழுவதும் மக்களை நேசித்தார். ஏழை எளியவர்களைச் சிநேகித்து நற்செய்தியை அறிவித்தார். பார்வையற்றோர், ஊனமுற்றோர், நோயுற்றோர் ஆகியவர்களை சுகப்படுத்தினார். எவ்விடம் சென்றாலும் நன்மையே செய்தார். மனிதன் செய்த பாவங்களை மன்னித்து சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தார்.



ஆனால் இப்போது கொடூரமும், குரோதமும் நிறைந்த மனிதர்களால் கொண்டுச் செல்லப்பட்டார். ஒரு சிலுவை மரத்தில் அவர் கைகளும், கால்களும் ஆணிகள் கொண்டு அடிக்கப்பட்டது. கொளுத்தும் வெயிலில் அவர் சிலுவை யில் தொங்கவிடப்பட்டார். அவரை அணு அணுவாய் சித்திரவதை செய்து கொலை செய்வதற்கான வழிதான் இது.

இயேசுவின் இருபுறமும் இரு கள்ளர்களும் கொலை செய்யப்பட்டனர். அவர்கள் கொலை செய்யப்படுவதற்குத் தகுதியானவர்கள். ஆனால் இயேசுவோ நிரபராதி. அவர் இறைவனின் தூய குமாரன்.

இயேசு "பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் இருக்கிறார்கள்" என்று இறைவனிடம் விண்ணப்பித்தார். அவருடைய விரோதிகள், சிலுவையின் அருகே நின்றுக் கொண்டு அவரை ஏளனம் செய்து சிரித்தனர். "மற்றவர்களை இரட்சித் தான்; ஆனால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியவில்லை" என்றார்கள். அவர்கள் இயேசுவை அடி யோடு வெறுத்ததால் அவர் மரணத்தைக் கண்டு ஆனந்தப் பட்டார்கள்.

ஆறு மணி நேரம் சென்ற பிறகு இயேசு தான் மரிக்கும் வேளை வந்து விட்டதை உணர்ந்தார். "நான் தாகமாயிருக்கிறேன்"

என்றார். ஒருவன் அவருக்குக் குடிக்க ஏதோ கொடுத்தான். இயேசு அதைக் குடித்து விட்டு ''முடிந்தது'' என்றார். பிறகு ஒரு உரத்த சத்தத்தோடு தன் தலையைத் தாழ்த்தி உயிர் நீத்தார்.

இயேசுவின் சீடர் வந்து அவர் உடலை எடுத்துச் சென்றனர். அவர் இனத்தவரின் வ்ழக்கப்படி பாறைகளுக்கிடையேயிருந்த ஒரு குகையில் இயேசுவின் உடலை வைத்தனர். யாரும் உள்ளே செல்லவோ வெளியே வரவோ முடியாத வகையில் ஒரு பெரிய கல் குகையின் வாயிலில் உருட்டி வைக்கப்பட்டது.

சீடர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள். இறைவனின் குமாரனான இயேசு ஏன் மரிக்க வேண்டும் என்று அவர்களுக்குப் புரியவில்லை.

## V

## இயேசு ஜீவிக்கிறார்

மூன்று நாட்களுக்குப்பின், ஞாயிற்றுக் கிழமை காலையில் இயேசுவை அறிந்த சில பெண்கள், அவர் உடல் வைக்கப்பட்டிந்த குகைக்குச் சென்றனர் அவர்கள் துக்கத்திலிருந்தனர்.



அந்தக் குகையை அணுகி அதன் வாயிலைப் பார்த்தார்கள். வியப்பில் ஆழ்ந்தார்கள்! அந்த பெரிய கல் விலக்கப்பட்டிருந்தது! குகை காலியாயிருந்தது! இயேசுவின் உடல் அங்கில்லை!

மரியாள் அந்தப் பாறையின் அருகே நின்று சுற்றும் முற்றும் பார்க்கையில், யாரோ தன் பின்னால் நிற்பதை உணர்ந்தாள். தோட்டக்காரனாயிருக்கும் என்று நினைத் தாள். "ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்று அந்த மனிதர் கேட்டதும் "ஐயா நீங்கள் அவரை எடுத்துச் சென்றி ருந்தால், அவரை எங்கு வைத்திருக்கிறீர்கள் என்று எனக்குச் சொல்லும்" என்றாள்

"மரியாளே!" என்றார் அவர்.

"போதகரே!" என்று ஆச்சரியத்துடன் சொன்னாள் அவள். அம்மனிதர்தான் இயேசு! அவர் மரித்தவராயிருக்க வில்லை! அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார்! மூன்று நாட் கள் மரித்துப்போயிருந்த அவரை இறைவன் உயிர் பெறச் செய்தார்!

அவரை முதலில் பார்த்தவள் மரியாள். பின்னர் தங்கள் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த சீடர்கள் இருவர் அவ ரைச் சந்தித்து அவருடன் பேசினார்கள்.

ஞாயிற்றுக்கிழமை மாலை அவர் தன் எல்லா சீடர்களுக் கும் தரிசனமானார். தோமா அவரைக் கண்டவுடன் "என் ஆண்டவனே! என் தேவனே!" என்று சத்தமிட்டான்.

அநேகமுறை இயேசு தன் சீடர்களுக்குத் தரிசனமாகி அவர்களுடன் பேசினார். நாற்பது நாட்கள் அவர்களுக்குப் போதனை செய்து தான் உயிருடன் இருப்பதை அவர்களுக்கு உணர்த்தினார். ''நீங்கள் என்னைக் கண்டதால் விசுவாசிக்கிறீர்கள். என்னைக் காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்'' என்றுக் குறிப்பிட்டார்.

ஒரு நாள் அவர் தன்னுடைய சீடர்களுடன் ஒரு மலை மீது இருந்தபோது அவர்கள் புறப்பட்டுப் போய் பூமியெங்கும் சுற்றித்திரிந்து, ஜனங்களுக்குத் தன்னைப்பற்றி அறிவிக்க வேண்டும் என்றுக் கட்டளையிட்டார்.

''நான் அவர்களுக்குக் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் - உலகத்தின் முடிவு வரை நான் அவர்களுடன் இருக்கிறேன் என்ற நம்பிக்கையில் உறுதியாயிருக்கவும் அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்குப்பின் இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர் இறைவனோடிருக்க வேண்டுமென்பதற்காக திரும்பிச் சென்றார். இப்போது பரலோகத்திலுள்ள தன் பிதாவோடு கூட இராஜாவாக அரசாளுகிறார்.

ஆனால் இயேசுவின் வாக்குத் தத்தத்தின்படியே அவருடைய ஆவி இன்றும் நம் மத்தியிலே இருக்கிறது. நாம் இயேசுவைக் கண்களால் காண முடியாது என்றாலும் அவரை

அறிந்துக் கொண்டு அவரை நேசிக்க முடியும். அவர் உயிரோடு நம் மத்தியில் இருக்கிறார். ஒரு நாள் நாம் இயேசுவை மறுபடியும் காண்போம். அவர் சீக்கிரம் இவ்வுல கிற்கு மீண்டும் வருவேன் என்று வாக்குக் கொடுத்திருக்கி றார். அரசனாக, இறைவனாக உலகை அரசாளுவார்.

# VI

# இறைவனை அடையும் வழி

இயேசுவின் வரலாறு 'சத்திய வேதம்' என்ற புத்தகத் தில் எழுதப்பட்டிருக்கிறது. அவரைப்பற்றியும், இறைவ னைப் பற்றியும் மேலும் பல காரியங்கள் அப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசு யார் என்றும், அவர் ஏன் இவ்வுலகத்தில் வாழ்ந்தார் என்றும் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இயேசு ஏன் மரித்தார், எப்படி உயிர்த்தெழுந்தார் என்ற கேள்விக ளுக்கு விடை அதில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## இயேசு கிறிஸ்து யார்?

வேதம் சொல்லுகிறது காண முடியாத இறைவனின் பிரதி பிம்பம்தான் கிறிஸ்து......... விண்ணுலகையும், மண் ணுலகையும் சிருஷ்டித்த தேவனே கிறிஸ்து''

இயேசு கிறிஸ்துவே இறைவன். இறைவன் எப்படியிருப்பார்? இறைவன், இயேசு கிறிஸ்தவைப் போலிருப்பார்!.

## இயேசு கிறிஸ்து ஏன் மண்ணுலகில் வாழ்ந்தார்?

வேதம் சொல்கிறது: தேவன் உலகை அளவுக்கதிகமாய் நேசித்ததால், அவரை விசுவாசிக்கிறவர்கள், அழிந்து போகாமல் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக தன் ஒரே குமாரனைக் (இயேசு கிறிஸ்து) கொடுத்தார். இறைவன் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்று நமக்கு எடுத்துச் சொல்லவே இயேசு வந்தார். நாம் காலம் காலமாய் இறைவனுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே நமக்கு நித்திய ஜீவனைத் தந்தார். நாம் மரித்த பிறகு பரலோகத்தில் இயேசுவோடு வாழ்வோம்.

## ஏன் எல்லோரும் கிறிஸ்துவை நேசிப்பதில்லை?

வேதம் சொல்கிறது! ''உலகம் அனைத்திலும் நல்லவன் என்று சொல்லத்தக்கவன் இல்லை. ஒருவனும் இறைவனின் வழிகளை அறிந்துக் கொள்ளவுமில்லை. சத்தியத்தை அறிய ஆசைப்பட்டதுமில்லை. எல்லோரும் பாவம் செய்துள்ளார்கள். உங்கள் இருதயம் கொடியதாயும், பாவம் நிறைந்ததாயும் இருக்கிறது. இதனால்தான் எல்லோரும் இயேசு கிறிஸ்துவை நேசிப்பதில்லை.

## பாவம் என்றால் என்ன?

தவறு என்று தெரிந்தும் செய்யும் காரியங்கள் தான் 'பாவம்' எனப்படுகிறது. கொள்ளையும், திருட்டும், பாவம், சண்டையும், கொலையும் பாவம்; பொய்யும், ஏமாற்றுதலும் பாவம். இயேசு கிறிஸ்து மோகம், திருட்டு, கொலை வேசித்தனம் பிறர் பொருள் மீது இச்சை இவற்றைப் பற்றி சிந்திப்பதே பாவம் என்கிறார். ஆம்! தீய காரியங்களைப் பற்றி பேசுவதும் சிந்திப்பதும் கூட பாவம் தான்! நாம் பாவம் செய்தால் தேவனை அறிந்துக் கொள்வது கூடாத காரியம் என்று இயேசு சொல்கிறார்.

## பாவிகளின் முடிவு என்ன?

இறைவன் எல்லா பாவங்களையும் வெறுக்கிறார். இறைவன் நல்லவர், குற்றமில்லாதவர், நீதி தவறாதவர், தூயவர். எனவே நம்மை நமது பாவங்களுக்காக தண்டித்தே தீர வேண்டும். பாவிகள் இறைவனின் அருகே வாழ முடியாது. அவர்களை, நித்திய காலமாக தண்டனை அனுப விக்கும் இடமாகிய 'நரகம்' என்ற இடத்திற்கு அனுப்பி விடுவார் இறைவன்.

## நாம் எப்படி இந்த நரகத்திற்கு தப்புவது?

இயேசு, ''என் வார்த்தைகளைக் கேட்டு, என்னை அனுப்பிய இறைவன் மீது நம்பிக்கை வைப்பவன் தன் பாவங்களுக்காக தண்டனை அனுப்பவிக்காமல் நித்திய வாழ்வைப் பெறுவான்,'' என்கிறார்.

## இயேசு கிறிஸ்து எதற்காக சிலுவையில் மரணமடைந்தார்?

வேதம் சொல்கிறது ''அவர் சிலுவையில் மரித்தபோது மனிதனின் பாவ பாரம் அனைத்தையும்தான் ஒருவராகவே சுமந்தார்'' உன் குற்றங்களையும், குறைவுகளையும் கழுவி, நீ செய்த பாவங்களையெல்லாம் மன்னித்து, உனக்கு பதிலாக அவர் மரித்தார். உன் இதயத்தை சுத்தமாக்க அவர் மரித்தார்.

''நம் மீது இறைவன் கொண்ட கோபத்தைத் தீர்க்கும் வகையில் நம் தண்டனை அனைத்தையும் ஏற்றுக் கொள்வ தற்காக இறைவன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார்.''

''நமது பாவங்களை கழுவ வேண்டுமென்பதற்காக கிறிஸ்து மரித்தார்.

## ஏன் கிறிஸ்து மீண்டும் உயிர்த்தெழுந்தார்?

வேதம் சொல்கிறது: "நாம் ஜீவித்திருக்கும்போதும், மரித்திருக்கும்போதும் நமக்கு தேவனாயிருக்கும்படியாக கிறிஸ்து மரித்து, பின்னர் உயிர்த்தெழுந்தார்" அவர் நமக்கு ஜீவனுள்ள தேவனாக, ஆண்டவனாக இருக்க வேண்டு மென்பதற்காக இறைவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிர்பித்தார்.

இயேசு கிறிஸ்து இன்றும் உயிரோடிருக்கிறார், உன் அருகே இருக்கிறார், அவர் உன்னை நேசிக்கிறார், உன் னோடு வந்து ஜீவிக்க விரும்புகிறார்.

ஆனால் பொய், விரோதம், பொறாமை, கோபம், தூய் மையின்மை ஆகிய தீய சிந்தனைகளால் உன் இருதயம் நிறைந்திருக்கிறது.

இந்த தீய சிந்தைகளினின்றும் நம்மை விடுவிக்க வேண்டுமென்றுதான் இயேசு மரித்தார். எல்லா பாவங்களி னின்றும் உன்னைக் கழுவ வேண்டுமென்றே அவர் தன் ஜீவனைக் கொடுத்தார். நீ இதை விசுவாசித்து இறைவன் இயேசு உன் இருதயத்தை சுத்தமாக்க வேண்டுமென்று கேட்டால் அவர் வந்து உன்னில் ஜீவிப்பார்.

தூய இருதயம் வேண்டுமென்று இயேசுவிடம் நீ இப்போதே கேட்பாயா ? நீ அவரை நேசிக்கிறாய், அவரைப் போல ஜீவிக்க விரும்புகிறாய் என்று அவரிடம் சொல்வாயா ? அவருக்கு ஊழியம் செய்து உன் வாழ்நாள் முழுவதும் அவரை பின்பற்ற விரும்புகிறாய் என்று அவரிடம் சொல்வாயா ?

நீ இப்படிக் கேட்டால் இன்றே இயேசு உன் உள்ளத்திற்குள் வருவார். உன் கோபத்தையும், குரோதத்தையும், தூய்மையற்ற நிலையையும் அவர் மாற்றிவிடுவார். உன் இருதயத்தை அன்பாலும், சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் நிரப்புவார். இப்பொழுதே அவரிடம் பேசு.

இயேசுவிடம் பேசுவது உனக்குத் தெரியாதிருந்தால் பின்வரும் விண்ணப்பத்தை பின்பற்றலாம்.

"இறைவன் இயேசுவே, நீரே உண்மையான தெய்வம் என்று நான் விசுவாசிக்கிறேன். நீர் விண்ணுலகிலிருந்து, மண்ணுலகிற்கு வந்து எனக்காக வாழ்ந்து உயிர் நீத்தீர் என்று விசுவாசிக்கிறேன். நீர் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன். நீர் என்மீது கொண்டுள்ள அன்புக்காக நன்றி தேவனே.

நான ஒரு பாவி என்று அறிவேன். பல தீய எண்ணங்கள் எனக்குண்டு. பல தீய காரியங்களையும் செய்திருக்கிறேன். என் பாவங்களை எடுத்துவிடவே நீர் மரித்தீர் என விசுவாசிக்கிறேன்.

இறைவன் இயேசுவே, என் உள்ளத்தினுள் வாரும். என் வாழ்க்கையை மாற்றி என்னை புதிய மனிதனாக்கும். என் உள்ளத்தைச் சுத்தமாக்கும். நன்மை செய்ய எனக்கு உதவும். உமது அன்பையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் எனக்குத் தாரும்.

என் ஆண்டவராகிய உம்மையே சேவிக்க விரும்புகிறேன். இறைவனாகிய உம்மையே ஆராதிக்க விரும்புகிறேன். என் சிநேகிதனாக உம்மை நேசிக்க விரும்புகிறேன். உம்மைப் போலவே மாற விரும்புகிறேன்.

எனக்கு செவி கொடுத்ததற்கு நன்றி இறைவன் இயேசுவே.''

நீ உண்மையாகவே மனம்விட்டு, ஜெபித்திருந்தால், அவரை உன் உள்ளத்தினுள் வரும்படி கேட்டிருந்தால் இயேசு கிறிஸ்து உன் ஜெபத்தைக் கேட்பார். இது அவருடைய வாக்குத்தத்தம். தன்னை நேசிப்பவர்களிடம்

“உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உன்னோடு இருக்கிறேன்” என்று சொல்லியிருக்கிறார். அவரை நம்பு; அவர் உன் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பார். அவரிடம் அடிக்கடி பேசு. இந்தக் கைப்பிரதியை அடிக்கடி வாசி. இயேசுவைப் பற்றியும் அவர் உனக்குச் செய்தவற்றைப் பற்றியும் உன் நண்பர்களுக்குச் சொல். அவரை விசுவாசிப்பவர்களை சந்திக்க முயற்சி செய்.

இயேசு உன் எல்லா பாடுகளிலும் உனக்கு உதவி செய்வார் என்றும், உன் பாவங்களிலிருந்து உன்னை இரட்சிப்பேன் என்றும், முழுமனதோடு பின்செல்ல வல்லமை தருவேன் என்றும் வாக்குக் கொடுத்திருக்கிறார்.

இயேசு கிறிஸ்து இறைவனின் குமாரன் என்று நீ விசுவாசித்து, அவர்மேல் நம்பிக்கை வைக்க வேண்டும், அதன் மூலம் நித்திய வாழ்வைப் பெறவேண்டும் என்பதற்காகவே இவையெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு மற்ற அநேக காரியங்களைக் குறித்து பேசியிருக்கிறார், அற்புதங்கள் செய்திருக்கிறார். இதைப்பற்றியெல்லாம் வேதத்தை வாசிப்பதன் மூலம் நீ தெரிந்துக் கொள்ளலாம்.

# இரட்சிப்பின் கவிதை

(ஒரு இரட்சிப்பின் ஜெபம்)

இயேசுவே நீர் சிலுவையில் மரித்தீர்
இழந்து போனோரை மீட்க உயிரோடு எழும்பினீர்
இப்போது என் பாவங்கள் அனைத்தும் மன்னியும்
மீட்பராக, ஆண்டவராக, நண்பனாக என்னிடம் வாரும்
என் வாழ்வை மாற்றி புதிதாக்கும்
ஆண்டவரே! உமக்காக வாழ உதவி செய்யும்.

ஆமென்

மேட் & ஷெரி மெக்பெர்சன்

# யார் இந்த மனிதன்?

இந்நூலில் குறிப்பிட்டுள்ள மனிதன் உலக வரலாற்றில் ஒரு மையமாகவும் இன்றும் வர லாறு படைத்துக் கொண்டும் இருக்கிறார். சிலர் அவரை ஒரு தத்துவ ஞானி என்றும் மற்றும் சிலர் ஒரு குருவாகவும் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். வேறு சிலர் அவரைத் தீர்க்கதரிசி யாகவும் கோடிக்கணக்கான மக்கள் அவரை தம்முடைய சொந்த இரட்சகராகவும் ஏற்று கொண்டுள்ளனர்.

அவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின் றீர்கள் என்பது, உங்களுடைய நித்திய வாழ்க்கை யின் இலக்காக அமையும். அவரை பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்கு முன் இந்நூலை படியுங் கள்.

Jointly Published by

David C Cook
a grassroots partner
& OM India

Follow-up Project, OM India, P.O. Box 2014, Secunderabad - 03

Printed by Authentic India, Secunderabad - 67

Who is this Man? *(Tamil)*